01/06/2016

# படைப்பு

சமூகத்தின் இணைப்பு

## மின் இதழ்

பதிப்பு – *1*



ஏதோ ஒரு முகமூடியில்
உருவங்களாய் சுற்றிச் சுற்றிச்
வருகின்றன..
அத்துணைக் கோபங்களையும்
அறுத்தெற முடியா வக்கிரங்களையும்
மனம் அஞ்சும் வஞ்சகங்களையும்
ஒரே முகமூடியில்
எவ்வாறு ஒளித்தீர்கள்..
நீளும் நட்புக் கரங்கள்
குளிர் போர்த்தி
சினம் சுமந்து வருகின்றன
அறியா இழையில் இறங்கும்
சினத்தின் மெல்லிய விஷங்களில்
சுதாரிக்கும் முன்
காயப்பட்டு விடுகிறது மனம்
சிரிப்புகளில் தெறித்த
உங்கள் சொல் சிலேடைகளைத்
தேடத் துவங்கும் நேரம்...
என்னை நானே
நொந்து கொண்டு விடை பெறுகிறேன்..
உங்கள் முகமூடிகளையே
முகமென்று நம்பியதற்காக!

-முனியாண்டி ராஜ்.

சுற்றி சுற்றித் தேடியும்
கண்டு பிடிக்க முடியவில்லை
இந்தத் தொட்டி மீனுக்கு
இன்னமும் தான் தோலைத்த
பெருங் கடலை..

-மீயாழ் செழியன்

திருவிழாக்களுக்கு
காத்துக்கொண்டிருக்கிறார்கள்
குழந்தைகள்
விதவிதமாய் விளையாட..
காத்துக்கொண்டிருக்கிறார்கள்
பெண்கள்
குடும்பமாய் ஒன்று சேர..
காத்துக்கொண்டிருக்கிறார்கள்
பருவக் கன்றுகள்
பார்வைகளால்
காதலை பரிமாறிக்கொள்ள..
காத்துக்கொண்டிருக்கிறார்கள்
வியாபாரிகள்
விட்ட நஷ்டத்தை
தட்டிப்பறிக்க...
காத்துக்கொண்டிருக்கிறார்கள்
பெற்றோர்கள்
நேர்த்திக்கடன் செலுத்தவும்
செலுத்தப்போவதாய் வேண்டியும்...
காத்துக்கொண்டிருக்கிறார்கள்
பூசாரிகள்
காவல் தெய்வங்களாய் மாறி
குறி சொல்ல..
காத்துக்கொண்டிருக்கின்றன
கடவுள் சிலைகள்
வீதி உலா அழைத்துவருபவர்களுக்காக..
ஏதோ..நோக்கத்திற்காக
காத்துக்கொண்டிருக்கிறார்கள்
ஒவ்வொருவரும்...
நோக்கங்கள் ஏதுமின்றி
உண்ணக்கொடுத்த
மரணத்தை மென்றுகொண்டு
மாலைகள் சுமந்தபடி
காத்துக்கொண்டிருக்கின்றன
ஆடுகள்...

-சந்துரு

முனை மடங்கிய பக்கங்கள்

-------------------------------------

பழைய பழுப்பேறிய
புத்தகத்தின் மடித்த முனைகளில்
பெரும்பாலும்
நீ தந்த முத்தங்களும்
உன் நான்காவது சத்த அழைப்பும்
மூன்றிலொருக் கோணத்தில்
சாய்ந்து கிடந்து,
திறக்கும் போதெல்லாம்
சற்றே நிமிர்ந்து
தடம் தொட தாகமாக்குகிறது…
அதன் பின்
அடிக்கடி வாசல் தாண்டும்
நம் குழந்தையின் முட்டிக்கால்களும்
உன் வலிக்காத
இரவுத் தலைக்குட்டலும்
அதற்கு நான்
மடங்கியதையும் காட்டுகிறது…
இன்னும் அது
நேரம் தாண்டிய
மகளின் இரவுகளையும்
தாங்கி நடக்க தோள் கேட்கும்
உன் காதல் முதிர்ந்த கரங்களையும்
அவற்றாலென்னை
அளவில்லா தகவுகளில்
பொதிந்தாக்கிய உன்னை
அழகு முனைப்பாய்
முனையெங்கும் காட்டுகிறது…
இச்சுவையினால் தான்
உனக்கான என்னை
நீ எப்போதும்
திறந்து பார்க்கும் வாய்ப்பில்
விரியாத சில
முனையுடைப் புத்தகங்களும்
என்னிடம் உனக்குண்டு காதலே…

- முருகன்.சுந்தரபாண்டியன்

குழந்தை
வேண்டுதலுக்கான
தொட்டில்கள்
கோயில்களில் வெறுமனே
காற்றாடி கொண்டிருக்கையில்
வேண்டுதலின்றி
குழந்தை வரம் பெறுகின்றன
குப்பைத் தொட்டில்கள்…

-சுயம்பு

எச்சில் பருக்கைகளில்
இறைந்து கிடக்கிறது
எங்கள் சுயம்
நாங்கள்
வாடகை வாயால்
களமாடும் மாவீரர்கள்
இரவல் சுவாசத்தில்
எங்கள்
இறுதி ஊர்வலம்
விலையில்லா
இலவசங்களால்
நிரம்பி வழிகிறது
எங்கள்
பிச்சைப் பாத்திரம்
உலகம் துப்பிய
எச்சிலை
ஒரு கையால்
துடைத்தபடியே
பூங்கொத்துக்களை
பரிமாறிக் கொள்கிறோம்
நாங்கள்
சாத்தானின் விரல் பற்றி சிரிக்கின்றன ஜனநாயகப்
பிணங்கள்
ஆட்காட்டி விரலில்
கருப்பாய் வழியும்
இரத்தத்தைத்
துடைத்தபடியே
மலையேறிக்
கொண்டிருக்கிறான்
சித்தார்த்தன்

- முருக தீட்சண்யா

யாருமற்றவள்
------------------------
வருத்தம் வாடி,
மூர்ச்சையாகும் தருணங்கள்
கரையட்டும் என
தடங்களின் தாக்கங்கள்
கலந்தே செய்கிறது....
விம்மி அழும் வானந்திரத்தின்
பாழ்வெளிகள் கரைத்தாண்டியும்
காட்சிக்குள் தவறி
கவனம் மறுக்கிறது.....
விழியோரத்தில் வந்துபோகும்
கனவுகளின் வரவுகளுக்கு
புரிவதில்லை...
யாருமற்றவளை
சிறகொடிக்கிறோம் என.....
நினைவுகளின்
துடிப்புகளில் அடங்கி
மீண்டும் கிளர்த்து
எழுகையில் மிச்சப்பட்ட
ரணங்களாகவே
சில கணங்கள்....
இறுதிவரை
தேடாமலே
காணக்கிடைக்கும்
கானகம் ஒன்றினுள்
தடதடத்துக் கொண்டிருக்கும்
மனதின் ஓசைகளோடு
படபடத்துக் கொண்டிருக்கிறேன்.
காரணமின்றியே,
யாரும் அற்றவளென....

-ஆனந்தி

தூரதேசத்தின் - வெளிர் பனி
முளைத்த சாலைகளின்
ஓரத்தில் - பூக்க எத்தனிக்கையில்
உறைந்து தூங்கும் மொட்டுக்கள்
விழியின் பின்கதவு தட்டியதுண்டு !
மணல்-கடல் மத்தியில்
புவியீர்ப்பு விசையை - புறம்
தள்ளி வளர்ந்த - கள்ளியின்
கூரிய முள்ளொன்று
மனக்கடல் குத்தியதுண்டு !
நீலத் திரவக் கூட்டத்தின்
முதுகேறி பயணிக்கும்
இனம் கானா மிதவையின்
குறுக்கு வெட்டுத் தோற்றம்
தோன்றி மறைந்ததுண்டு !
தன பிஞ்சுவிரல் மலர்ந்து
கை காட்டியபடி காணாமல்
போகும் - குழந்தையின்
முகம் - அழியாச் சுவடாக !
அச்சேற்றம் அதிகமென்பதால்
ஓர் முகம் மட்டும்
அநேக நேரங்களில்
அதி-தெளிவாய் தெரியும் !
யாரின் முகமென
உங்களுக்கும் தெரியும்தானே ?
ஒன்றுக்கொன்று உறவில்லா
ஓராயிரம் உலவுவதுண்டு
என் கனாச்சந்தையில் !
ஏதோ ஓர் உறவு இருப்பதாய்
அறிவியல் நம்புகிறது !
நம்பிக்கைக்கு அப்பாற்பட்டு
என் விழிகள் - கடந்து
சென்ற கனவுகளில்
பாதம் கடந்து பயணிக்கிறது,
ஏதோ ஓர் அகச்சுகத்தோடு !

- வினோதன்

எடுத்தேன்
கவிழ்த்தேனென்றில்லாது
எதிலும் தென்படும்
உன் நிதானத்தில்
பெருமைப்பட்டேன்!
பட்டயப்படிப்பின்
பெருமைகளெதுவும்
பிடிபடாத
உன்
பேச்சு வழக்கை
அறிவார்ந்த
அடக்கமென்று
ஆச்சர்யமாய்
தரிசித்தேன்!
நீ
கோபப்படுகையில்
இதயத்து நேர்மையின்
எழுச்சியென
சந்தோஷித்தேன்!
என்மீதான உன்
கரிசன வார்த்தைகளில்
அன்புப் பெருக்கென்று
அகமகிழ்ந்தேன்!
.........
ஆனால் ...
உன் நிதானம்
சோம்பேறித்தனத்தின்
விளைவென்றும்
உன் அடக்கம்
அறிதலில்
நேர்ந்திட்ட
பிழையென்றும்
உன் கோபம்
கையாலாகாத்தனமென்றும்
உன் அக்கறை
என்னை
அதிகம்
கேள்வி கேட்டுவிடாது
அடக்கிவைக்கிற
சாதுர்யமெனவும்
சாணக்கியத்தனமெனவும்
அறியவரும்போதோ...???
இருந்தாலும்
நன்றி
நண்பனே!

எதையும்
மதிப்பிடத் தெரியாதயென்
மதியீனத்தை
இத்தனை வழிகளில்
எனக்கு உணர்த்திய
உனக்கு!

**- வளவன் கரிகாலன்**

இறந்துபோன
பனிச்சறுக்கு மானின்
எலும்பைப்போல
வெளிறிக் கிடந்த
காகிதப் பக்கங்களில்
புதிய கனவொன்றின்
எஞ்சிய திரவ
மையினைத் தெளிக்கிறேன்
வெண்ணிற இரவுகளின்
காதல் கதையாய்
இரண்டு நியாயமான
பதில்களை அது
என்னிடம் நீட்டுகிறது
தேம்ஸ் நதிக்கரையைத்
தாண்டி யோசிக்க
முடியாத கற்பனைகளை
கால்சட்டைப் பையில்
திணித்தபடி
நடந்து செல்லும்
என் நினைவுகளைத்
தின்று முடித்திருந்தன
கூடவே இருந்த
ஒலிவ் இலைகள்
இப்போது கேள்விக்குறி
இடம் மாறியிருந்தது

**-நசீஹா மொஹைதீன்**

போதாமைகளின் பெருநகரம்..!!
-------------------------------------------------
ஒரு குலவை ஒலிக்குள்ளிருந்து நெருப்பெடுத்து
நிராதரவின் தலைமகளாக ஒடுங்கி நிற்பவளின்
ஈரல்குலையைப் பற்றவைத்துச் செல்கிறான்.
அவள் அழகாக இருக்கிறாள்
அவள் இளகிய இதயம் கொண்டிருக்கிறாள்
அவள் நேசமிகுந்த புன்னகைக்காக ஏங்குபவளாக இருக்கிறாள்
அவள் காமக்கொடூரன்களை காதலனென நம்பித் தொலைகிறாள்
கன்னிப் பிரேதங்கள் மிதக்கும் கிணறுகளின் நீரிறைக்கப்பட்டு
வளரும் தென்னைகளிலிருந்து
மென்மையான குறுமுலைகள் கொத்துக்கொத்தாய்க் காய்ப்பதாகக்
கனாக்கண்டு திகிலுற்று எழுபவனுடைய கடைவாயில் ரத்தம் வழிந்த தடயம்
பல்லிடுக்குகளின் குத்திக்கிழித்த பச்சை மாமிச மிச்சம்
ஜின்கள் தூக்கிச்சென்று குடும்பம் நடத்துவதாய் நம்பவைக்க
கைமடக்குப் பெற்று ஏப்பம்விடும் கள்ள மூஸ்லியார்களில்லை
பூதம் கடத்திக்கொண்டு போய் ஏழுகடல் ஏழுமலை தாண்டி சிறைவைத்திருப்பதாய்
லிங்கம் வரவழைத்துச் சாம்பல் பூசிவிடும் கள்ள சாமியார்களில்லை
மோப்பநாய்களும் சிசிடிவி கேமராக்களும் பிரேதப் பரிசோதனைகளும்
அறுபட்ட முலைகளை மறைக்கத் தோதாத இல்லை
உரிய தொகை பெற்றுக்கொண்டு தற்கொலையன்று தீர்ப்பெழுத
நகரில் தொந்திபெருத்த நீதிபதிகளுண்டு
கூச்சலடக்கி கூடுதிரும்பி அடுத்த அநீதியை நோக்கி   நகர
மறதியெனும் செல்வம் படைத்த மக்களுண்டு
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி
எல்லாப்புகழும் இறைவனுக்கே
பரலோக ராஜ்ஜியம் சமீபமாயிருக்கிறது
பிதாவே இவர்கள் அறிந்தே பிழைகள் செய்கிறார்கள்
பிதாவே இவர்களை தண்டியும்

--நிஷாமன்சூர்

மகிழ்வின் இராகத்தை
இசைகூட்டிச் சுரம் கூட்ட
விரல்களின் வித்தையில்
வீணையின் தந்திகள் அதிர
நர்த்தனமாடும்
சந்தோச நீர்மைக் குளியலின் ஊடே
அதிர்ந்த நரம்புகளின்
நரம்புகள் புடைத்து.
சிலீரென்றறுந்துத் தன் உயிர் மாய்க்க
மரிக்கும்முன்
தெரித்து வீழ்ந்த அக் கம்பி
மீட்டியவன் விழிப்பாவை உரசி
உதிரம் மீட்டி நகரும் வேளையில்
மகிழ்வின் இராகம் மடங்கி
சோகத்தின் இராகத்தை
உச்சம் தொட்டு அலறியது போல்
காதலின் மகிழ்வை மாய்த்தே...
நீ கொடுக்கிறாய்ப் பெண்ணே...
உன் திருமண அழைப்பிதழ்!

- முகமது பாட்சா